# திருமலைத்தீபம்

## Thirumalaitheepam

தீபம் – 89 ஐப்பசி – 2024 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=


## ஆயரின் செய்தி



**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

இது அக்டோபர் மாதம், மரியன்னையின் வணக்கமாதம் மே மாதம் போல இம்மாதமும் தனித்தும், குடும்பமாகவும், பங்குச் சமூகமாகவும் நாம் செபமாலை செபித்து, பிரார்த்தனையில் ஈடுபட்டு திருப்பலியில் அல்லது நற்கருணை ஆராதனையில் ஈடுபடுகின்றோம். செபமாலை என்பது யாரும் இலகுவாக செபிக்கக்கூடியதாக எமது தாய்த் திருஅவையால் எமக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பான சொத்து. நாம் பயணிக்கும் போதும் அமைதியில் செபிக்கக்கூடிய ஒரு செபம்.

செபமாலை செபிக்கும்போது நாம் மறையுண்மைகள் பற்றியும் தியானிக்கின்றோம். இதிலிருந்து நாம் தாழ்ச்சி, பொறுமை, கீழ்ப்படிவு, அர்ப்பணம் போன்ற நற்பண்புகளையும் கற்றுக்கொள்கின்றோம். செபமாலை செபிப்பது எமக்குப் பெரும் ஆறுதலைத் தருகின்றது. பரபரப்பான எமது வாழ்விலிருந்து நிதானம் நிறைந்த ஓர் சூழ்நிலைக்கு எம்மை இட்டுச்செல்கின்றது.

இது செப ஆண்டு. செபத்தின் முக்கியத்துவத்தையும், வலிமையையும், வல்லமையையும் அறிந்து பயன்பெற இவ்வாண்டில் நாம் அதிக முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். “செபம் இல்லாமல் கிறிஸ்தவ வாழ்வு இல்லை.” இயேசுவும் தனது பணி வாழ்வின்போது இறைத் தந்தையோடு எப்போதும் தொடர்பில் இருந்தார். விசேடமாக மலைப்பொழிவு, திருத்தூதர் தெரிவு, தன் பாடுகள் போன்ற நிகழ்வுகளுக்கு முன்பாக இயேசு அதிக நேரம் செபத்தில் இறைவனோடு உரையாடினார். நாமும் செபத்தின் மூலம் இறைவனோடு ஒன்றிக்கிறோம். அவரது விருப்பத்தை அறிந்து செயற்படுகின்றோம். அவரைப் புகழ்ந்துபாடி, நன்றிகூறி, வரம் வேண்டுகிறோம். கிறிஸ்துவத்தில் நம்பிக்கையாளருக்கும் இறைவனுக்கும் செபத்தின் மூலம் உருவாகும் உறவின் ஆழம் தனித்துவமானது. இறைவன் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், மனமுருகி அவரிடம் வரும் ஒவ்வொரு பாவியையும் இறைவன் மன்னித்து புதுவாழ்விற்கு அழைத்து செல்லுகின்றார். காணமற்போன மகன் உவமை, சக்கேயு, விபசாரத்தில் பிடிபட்ட பெண், பேதுரு போன்றோரின் அனுபவங்கள் எமக்கு சிறந்த உதாரணம். திருஅவை வரலாற்றிலே புனிதர்கள், மறைசாட்சிகளின் நம்பிக்கை ஆயுதமாக இருந்தது செபம்.

👉 2

**அதிவணக்கத்திற்குரிய ஆயர்**

**கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**



## மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக பேரருட்திரு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை நியமனம்

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக பேரருட்திரு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 19.08.2024 அன்று நியமனம் பெற்றுள்ளார். இவர் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயரும் தேசிய கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவிற்கு பொறுப்பான ஆயருமாவார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் ஓய்வுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை அவர்களினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பேரருட்திரு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## வாழ்த்துகிறோம்

இலங்கை கத்தோலிக்க திருஅவையின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் கத்தோலிக்க திருஅவைக்குப் பங்களிப்புச் செய்யும் கலைஞர்களை வருடாந்தம் கௌரவிக்கும் மாபெரும் நிகழ்ச்சியில் வாழ்நாள் சாதனையாளர் விருதான “தர்மபிரபாஸ்வர” விருதினைப் பெற்ற திருகோணமலை உவர்மலை குழந்தை இயேசு பங்கைச் சேர்ந்த அன்ரன் றாகல் மற்றும் பாலையூற்று லூர்து அன்னை திருத்தல பங்கைச் சேர்ந்த அன்ரனிதாஸ் சகாயமேரி அவர்களையும் வாழ்த்துகிறோம்.



## செபிப்போம் வாழ்த்துவோம்

### குருத்துவ வாழ்வில் பொன் மற்றும் வெள்ளி விழாக் காணும் அருட்பணியாளர்கள்



குருத்துவ வாழ்வில் பொன் விழா காணும்

**அருட்பணி. அன்ரனி லியோ அடிகளார்**



குருத்துவ வாழ்வில் வெள்ளி விழா காணும்

**அருட்பணி. அ.அ.றொஹான் பேர்ணார்ட் அடிகளார்**

திருத்தந்தையின் செய்தி

## உலக அமைதிக்காக

### அன்னை மரியாவை நோக்கித் திருத்தந்தையின் செபம்



ஓ மரியே எங்கள் அன்னையே, இதோ மீண்டும் நாங்கள் உம் முன் வருக்கின்றோம். இந்த நேரத்தில் எங்கள் இதயங்களைக் கனமாக்கும் துயரங்கள் மற்றும் கடினமான சூழல் என்ன என்பதை நீர் அறிவீர். உம்மை பார்த்து உமது கண்களோடு எங்கள் கண்களை இணைத்து இதயப்பூர்வமாக உம்மை நம்பி வேண்டுகின்றோம்.

வாழ்க்கையில் கடினமான சோதனைகள் மற்றும் பயம் நிறைந்த சூழல்களில், துணிவுடனும் தைரியத்துடனும் நீர் இருந்தீர். எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்து, அன்பினால் அவருக்கு பதிலளித்தீர். துணிவு நிறைந்த பெண்ணாக எலிசபெத் அம்மாவிற்கு உதவ விரைந்து சென்றீர். கானாவூர் திருமணத்தில் திருமண வீட்டாரின் தேவைகளை அறிந்து உதவினீர். தூய ஆவியின் ஆற்றலுடன் கல்வாரி மலையில் உயிர்ப்பின் நம்பிக்கையை ஒளிரச்செய்தீர், பயத்துடன் மேலறையில் இருந்த சீடர்களுக்கு துணிவை அளித்து, தூய ஆவியைக் கொடையாகப் பெற உதவினீர்.

எங்களது கூக்குரலுக்குச் செவிசாயும். உமது மகன் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ள அழைப்புவிடுக்கும் உமது அன்பு நிறைந்து பார்வை எங்களுக்குத் தேவை, அநீதியால் ஒடுக்கப்பட்டு, போர்களினால் அழிந்துபோகும் இக்கால மக்களாகிய எங்களின் துயரங்களை, ஏற்க நீர் தயாராக உள்ளீர். தங்களது அன்புக்குரியவர்கள் மற்றும் குழந்தைகளின் மரணத்தால், துன்புறுவோரின் முகங்களில் உள்ள கண்ணீரைத் துடைத்து எங்களை வேதனையிலிருந்து எழுப்பும். அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது, ஆவர்கள். இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள். என்ற எசாயா இறைவாக்கினரின் வார்த்தைகள் நிறைவேறச் செய்யும்.

அமைதியின் மகிழ்ச்சியை உடன் பிறந்த உணர்வினை, இழந்த மனித குடும்பத்தின் மீது உமது பார்வையைத் திருப்பும். வாழ்வைக்காத்து போரைப் புறக்கணிக்கவும், துன்புறுபவர்கள், ஏழைகள், பாதுகாப்பற்றவர்கள், நோயாளிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும் நாங்கள் வாழ்கின்ற பொதுவான இல்லமாகிய இந்தப் பூமியைக் காக்கவும் உதவிபுரியும். அழிந்துபோகின்ற எம் உலகிற்காகப் பரிந்து பேசும்.

இறை இரக்கத்தின் அன்னையே, அமைதியின் அரசியே, வெறுப்பை உருவாக்குபவர்களின் மனதை மாற்றவும், இறப்பை உருவாக்கும் ஆயுதங்களின் சத்தத்தை அடக்கவும், மனிதனின் இதயத்தில் உருவாகும் வன்முறையை அணைக்கவும், நாடுகளை ஆள்பவர்களின் செயல்களில் அமைதிக்கான திட்டங்களை ஊக்குவிக்கவும் உதவும். இதனால் பாலைநிலம் செழுமையான தோட்டமாகும், செழுமையான தோட்டம் அடர்ந்த காடாகத் தோன்றும். நீதி பாலைநிலத்தில் குடிகொண்டிருக்கும்; ஓ தூய மரியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஆமென்

**வத்திக்கான் செய்தி**

**ஆயரின் செய்தி தொடர்ச்சி...**

எதிர்வரும் 2025ம் ஆண்டு யூபிலி ஆண்டாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். இதற்கான ஆயத்தங்களை எமது மறைமாவட்ட மட்டத்தில் நாம் மேற்கொண்டு வருகின்றோம். நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மறைமாவட்ட வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது இதுபற்றி நாம் விளக்குவோம். இதுபற்றிய விபரங்கள் மறைமாவட்ட வெளியீடுகளிலும் பிரசுரிக்கப்படும். "நம்பிக்கையின் பயணிகள்" எனும் தலைப்பில் யூபிலி ஆண்டிற்கான செயல்பாடுகள் அமையும்.

செப ஆண்டு, யூபிலி ஆண்டு அனைத்தும் கிறிஸ்தவர் எமக்கு ஆசீராக அமைந்து ஆன்மீகத்தில் வளரவும், பிறர்நலத்தோடு செயற்படவும் தூண்டுகின்றன. இவற்றை நாம் எப்போதும் எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

இறையாசீர் எப்போதும் உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவில்,
திருமலை மறைமாவட்ட ஆயர்.

# நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம்



மேற்படி நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையமானது திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் ஆளுகையின் கீழ் உருவாக்கப்பட்டு, அருட்தந்தையும் பிரபல சட்டத்தரணியுமான வி.யோகேஸ்வரன் அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் 2016 ஆம் ஆண்டு தனது இலவச சட்டம்சார் சேவைகளையும், மனித உரிமை மற்றும் மனிதநேயப் பணிகளையும் வழங்கிவருகிறது.

இந்நிலையத்தின் செயற்பாடுகளாக இலவச சட்ட ஆலோசனை வழங்குதல், வழக்குகளை நடாத்துதல், கல்வி துறைசார்ந்த செயற்பாடுகளாக இளைஞர்களுக்கான மனித உரிமை சான்றிதழ் கற்கை நெறிகளை நடாத்துதல். தெரிவு செய்யப்பட்ட அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய பரா சட்ட (Paralegal) கற்கைநெறியை நடாத்துதல், சட்டம்சார் வெளியீடுகளாக



சாதாரண மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அடிப்படை சட்டம் சார்ந்த புத்தகங்கள் மற்றும் சட்டத்துறையில் செயற்படு பவர்களுக்கான சட்டப் புத்தகங்களை வெளியிடுதல். மேலும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல். குறிப்பாக பெண் உரிமைகளையும் பெண்கள் சார்ந்த அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

மேலும் இங்கு குடியியல் சார்ந்த வழக்குகளுக்கான (Civil cases) உதவிகள் மாத்திரமே வழங்கப்படும். எனவே சட்ட ஆலோசனைக்கும் சட்ட வழிகாட்டல்களுக்கும் இந்நிலையத்தை நாடவும்.

தற்போது எமது நிலையத்தின் பணிப்பாளராக அருட்பணி. டன்ஸ்டன் பிறேட்றிக் ஜோசப் பொறுப்பேற்றுள்ளார். சட்டத்தரணிகள் பயிற்சி பெற்ற ஆளுமை கொண்ட அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களைக் கொண்டு இந்நிலையமானது தனது சேவையை வழங்கி வருகிறது.



எனவே எமது மறைமாவட்டத்திலுள்ள மக்கள் குறிப்பாக வறுமை கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கான இலவசமான சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் எங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கும் எதிர்கால சந்ததிகளின் மனித உரிமைகள் சார் பாதுகாப்பையும் வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் இந்நிலையம் தயாராக உள்ளது.

**பயன்படுத்துவோம்! பகிர்வோம்!**
**பயணிப்போம்! பாதுகாப்போம்!**

நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம்
200/1, சுங்கவீதி, திருகோணமலை (0263260895)

**தகவல்**
**ச.சந்திரகுமார் பணிப்பாளர் சபை உறுப்பினர்**

## இன்னுமா தயக்கம் 33

# நான் ஏன் ஏமாந்து போனேன்?

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

அன்பு நிறைந்த சகோதரமே,

ஒரு குருவிடம் ஒரு நண்பர் சென்று தான் மகிழ்ச்சியாக இல்லை, மகிழ்ச்சியை தன் வாழ்க்கையில் எப்படிப் பெற்றுக் கொள்வது என்று கேட்டார்.

குரு கேட்டார், "உன் மகிழ்ச்சிக்கு என்று நீ இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றாய்? இப்போது ஏன் உனக்கு மகிழ்ச்சி இல்லை என்று நினைக்கின்றாய்?" என்று கேட்டார்.

குரு சொன்ன வார்த்தையில் மிகவும் அர்த்தம் உள்ளது. பல வேளைகளில் நாம் என்ன செய்கின்றோம் என்றே தெரியாமல்



மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டே மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகின்றோம். "உனக்கு மகிழ்ச்சி இல்லை என்று ஏன் நினைக்கின்றாய்?" என்ற கேள்விக்கு அந்த நண்பர், "நான் பல தொழில் முயற்சிகளைச் செய்துவிட்டேன், பல தோல்விகளையே சந்தித்திருக்கின்றேன், இந்த தோல்விகள் ஏன் வருகின்றன என்று பார்த்த போது, என்னைச் சுற்றி நான் நல்லவர்கள் என்று நம்பிக் கொண்டிருந்த பலர் என்னை ஏமாற்றியுள்ளனர் என்பதைக் கண்டுபிடித்துள்ளேன். இவ்வாறு நான் ஏமாற்றப்பட்டுள்ளேன் என்று நினைக்கும் போது மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை" என்று கூறினார்.

குரு கேட்டார், "மற்றவர்கள் உன்னை ஏன் ஏமாற்றினார்கள் என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறாயா?" நண்பர் சொன்னார், "நான் அவர்களை விட அதிகமாக வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவும், என்னை தங்கள் சுயநலனுக்காகப் பயன்படுத்துவதற்காகவும், அவர்கள் என்னை ஏமாற்றியிருக்கிறார்கள்". குரு மீண்டும் கேட்டார், "அவர்களைப் பற்றி நீ இப்போது என்ன நினைக்கின்றாய்?" நண்பர் சொன்னார், "நான் அவர்களுக்கு ஒரு நல்ல பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும். என்னை ஏமாற்றியது போல அவர்கள் யாரையும் இனிமேல் ஏமாற்றக் கூடாது!"

குரு கேட்டார், "உனது கோபம், அவர்கள் கெட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதா, நீ ஏமாற்றப்பட்டுவிட்டாய் என்பதா? பாடம் புகட்டி அவர்களைத் திருத்தி விட முடியுமா, அவர்கள் திருந்தினால் நீ மகிழ்ச்சியாக இருப்பாயா? அப்படியானால் நீ எப்படி அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பது? அவர்களையும் என்னைப் போல ஏமாற வைக்க வேண்டும். அது தான் அவர்களுக்கு சிறந்த பாடமாக இருக்கும். ஆனாலும் அவர்கள் திருந்தப் போவதில்லை. அவர்கள் மிகவும் கெட்டவர்கள்!"

குரு கேட்டார் திருந்த மாட்டார்கள் என்றால், ஏன் அவர்களுக்கு நீ பாடம் புகட்ட வேண்டும் நண்பர் சிந்தித்தார், மீண்டும் குருவிடம் கேட்டார், நான் என்ன செய்ய வேண்டும். குரு கேட்டார், "பிறரை திருத்துவேன் என்று சொல்வதற்கு முன்னால் எப்போதாவது நான் திருந்துவேன் என்று நினைத்திருக்கிறாயா? எப்போதாவது நான் ஏன் அவர்களிடம் ஏமாந்து போனேன் என்று சிந்தித்துப் பார்த்திருக்கிறாயா?"

மனிதர்கள் ஏமாந்து போவதற்கு மிகச் சில காரணங்களே இருக்கின்றன. அந்த காரணங்களை நாம் கண்டு பிடித்துவிட்டால், பல துன்பங்களை நம் வாழ்க்கையில் நாம் தவிர்த்துக் கொள்ளலாம். இந்தக் காரணங்களை வகைப்படுத்தினால் வெறும் இரண்டு வகையில் அடங்கிவிடும். ஒன்று நாம் அதிகமாக ஆசைப்பட்டது, இன்னொன்று அதிகமாக பயந்தது. ஆசைப்படுவது தவறு அல்ல ஆனால் அளவுக்கு அதிகமாக ஆசைப்படுவது தவறானது. விரலுக்கேற்ற வீக்கம் என்று சொல்வார்கள். நமது வாழ்க்கையில் நமக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து மட்டும் ஆசைப்பட வேண்டும். அளவுக்கு அதிகமாக ஆசைப்படுவது தோல்வியைத் தரும். மற்றொன்று தேவையற்ற பயம். இந்த தேவையற்ற பயம் கூட நன்றாகப் பார்த்தல் நமது சுயநல சிந்தனையை வெளிக்காட்டும்.



பயமும் ஆசையும் சுயநலத்தின் வெளிப்பாடு. இவற்றை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டால், நாம் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றி பெறலாம். நண்பர் கேட்டார், "நான் ஆசைப்பட்டதாலும் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய சில பயம் கொண்டதாலும் தான் என்னை ஏமாற்றியவர்களை நம்பினேன் என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் ஆசைப்படாமல் எப்படி வாழ்வது, பயம் இல்லாமல் எப்படி வாழ்வது? இது சாத்தியமா?"

நன்றாக உற்றுப் பாருங்கள், இவர் சொல்வது முற்றிலும் சரி தான். என் வாழ்க்கை, என் குடும்பம், நானே இவற்றைப் பார்க்க வேண்டிய பொறுப்பிலிருக்கிறேன். இந்தப் பொறுப்பை வேறு யாரிடமும் நான் கொடுக்க முடியாது என்று நினைக்கும் போது, ஆசையும் பயமும் தவிர்க்க முடியாத ஒன்று. புத்தர் கூறுவார், "ஆசையே துன்பங்களுக்கு காரணம்!" என்று இது மிகவும் சரியான கூற்று. நம் துன்பங்கள் அனைத்தையும் சற்று சீர்தூக்கிப் பார்த்தால், அவற்றின் அடிப்படை ஆசையே என்று நமக்குத் தெளிவாகும். இந்த ஆசை இல்லாமல் எப்படி வாழ்வது?

எளிமையான பதிலை குரு நண்பருக்குக் கூறினார். "கடவுளை நம்புகிறாயா?" நண்பர் கூறினார், "நிச்சயமாக நம்புகிறேன். அவரே என் வாழ்வின் எல்லாம்!" குரு கேட்டார், "அப்படியானால், உன் வாழ்க்கையை அவர் பார்த்துக் கொள்வார் என்று ஏன் நீ நம்பவில்லை தயக்கமின்றி நண்பர் சொன்னார், நிச்சயமாக நம்புகிறேன். நான் தீவிரமான கடவுள் பக்தன்!



குரு சொன்னார், காலையில் எழுந்து ஜெபிக்கும் போது என் வாழ்க்கைக்கு பொறுப்பு நானா, நீயா? நான் படும் துன்பங்களுக்குக் காரணம் நானா, நீயா? இந்த நாளை வழிநடத்தப் போவது நானா, நீயா? என்று கேட்டுப்பார். உனக்கு பலவற்றைப் பற்றிய தெளிவு கிடைக்கும்!

நன்றாக சிந்தித்துப் பாருங்கள், என் வாழ்க்கை என் பணி என்று நினைக்கும் போது நாம் அவற்றைப் பற்றி கவலைப் படுகின்றோம், ஆசைப்படுகின்றோம், பயப்படுகின்றோம். பிரச்சனைகளை நாமே உருவாக்கிக் கொள்கின்றோம். ஆனால் உண்மையில் அவை நம் பணிகள் தானா, நம்மால் அனைத்தையும் சிந்திக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்ப்போம். நம் சிந்தனைகளையும் தாண்டி பலவற்றை நாம் பார்க்கின்றோம். அவற்றை என்ன செய்வது?



அன்பார்ந்தவர்களே, நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற நிலையையும் தாண்டி இறைவனின் உடன் பணியாளர்கள் என்பதை உணர்வோம். நற்கருணை வழியாக இறைவன் நம்மை தன் உடலாகவே மாற்றியிருக்கிறார். எனவே இறைவன் நம் உடலில் இருக்கின்றார். அனைத்தையும் அறிந்த அந்த இறைவனிடம் நம் வாழ்க்கையை ஒப்படைப்போம். அவர் பார்த்துக் கொள்வார்.

# அன்பிய வாழ்வே கிறிஸ்தவ நிறைவாழ்வு

செ. செல்வராஜ்
(பெரிய உப்போடை)

இயேசுவின் இறையாட்சிப் பணியை உலகம் முழுவதற்கும் ஆற்றவேண்டிய பொறுப்பை திருஅவை பெற்றுள்ளது. எனவே ஒரு அன்பியமானது இதே பணியை தன்னுடைய அக்கம் பக்கத்தில் நிறைவேற்றும் கடமையைப் பெற்றிருக்கின்றது. (எ.கா) இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாட, நன்றி கூற, ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ, ஒற்றுமை சமாதானத்தை நிலைநாட்ட, நம்பிக்கையை பகிர்ந்து வாழ ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ, ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க, பிறமொழி மதத்தினரோடு நல்லுறவை ஏற்படுத்தி அன்புக் கலாச்சாரத்தின் அடிப்படையில் புதிய சமூகம் படைக்க இறைவாக்கினர்களாக, சீடர்களாக, சாட்சிகளாக வாழ்ந்து சான்று பகர அன்பியங்கள் வழிசமைக்கின்றன.

பங்கு என்பது உயிராற்றல் மிக்க சமூகங்களின் சமூகம். 1990ல் ஆசியத்திருஅவை சுற்றுமடல் எண் 25, தி.பணி 2:42 – 47, 4:32 – 35ஐ மேற்கோள் காட்டி அன்பியங்களின் அவசியம் பற்றியும், அன்பியங்கள் இன்றைய உலகின் அவசியத் தேவையான அன்புக்கலாச்சாரத்தின் வெளிப்பாடு என்றும், இன்றைய விஞ்ஞானம் மற்றும் பொருள் சார்ந்த உலகில் திருஅவையின் மறைபரப்புப் பணியையும் நற்செய்தி அறிவிப்பையும் ஊக்குவிக்க பங்குப்பணியாளர்கள் அடித்தளத் திருஅவைச் சமூகங்களை (அன்பிய சமூகங்களை) உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

திருஅவை வரலாற்றில் காலத்துக்குக் காலம் வழிபாடுகள், இறைபணி, திருஅவையின் அமைப்பு போன்றவற்றில் காலத்திற்கேற்ப பற்பலவிதமான மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இன்றைய திருஅவையின் தேவை அல்லது காலத்தின் கட்டாயம் எனக்கருதப்படும் அன்பியங்கள் இந்த இறுதி நாட்களில் நாம் நமது மீட்பினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக இறைதந்தையால் அவருடைய திருவுளத்திற்கேற்ப (மத் 18:14) தூய ஆவியானவர் வழியாக அருளப்பெற்ற அன்புப் பொக்கிஷமாகத்தான் அன்பியத்தை அடையாளம் காண்கின்றோம்.

நமது பங்குகளில் பொதுநிலையினர் ஆயனுடன் நல் உறவுடன் ஒன்றுபட்டு உழைக்கும் அன்புச்சமூகமாக மாறியுள்ளதற்கு அன்பியமும் பிரதானமான காரணம் என்றால் அது மிகையாகாது. பங்கிற்கு புத்துயிர் ஊட்டி திருஅவையின் முகத்தைப் புதுப்பித்து புதுவாழ்வுக்கு இட்டுச் செல்லக் கூடிய வல்லமை அன்பியத்திற்கு உண்டு.

பங்குகளில் காலம் காலமாகக் காணப்பட்டுவரும் பல்வேறு அமைப்புகளையும், இயக்கங்கள், கழகங்களை எல்லாம் கைவிட்டுவிடாமல் அவற்றினால் ஏற்பட்டுவந்த நன்மைகள், மாற்றங்களைச் சீர்தூக்கிப்பார்த்து புதிய உத்வேகத்துடனும் புத்துணர்ச்சியுடனும் பொதுநிலையினரை வழிநடத்தவும் இறைவன் தந்த அன்புப்பரிசுதான் அன்பியமாகும். ஏனெனில் காலத்தின் கட்டாயத்தேவை அன்பியம் என்று இறையியலாளர்களாலும், ஆயர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே சிறந்த சான்றாகும்.

நற்செய்தி அறிவிப்பு திருமடல் எண் 58இல் இன்று அன்பியங்கள் எனப்படும் அடித்தளத் திருஅவைச் சமூகங்கள் அல்லது சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் நற்செய்தி ஊடாக விளக்கும் சக்தியைப் பெற்றிருப்பதால் அன்பியங்கள் உலகத் திருஅவையின் நம்பிக்கையாக உள்ளது என்று திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் கூறியுள்ளார். மேலும் 20ஆம் நூற்றாண்டு திருஅவையை இதுவரை இல்லாத அளவுக்கு 20ஆம், 21ஆம் நூற்றாண்டு மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் திருஅவையாக மாற்றும் பின்னணியில் அன்பியத்தின் (அ.தி.ச – சி.கி.கு) முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அன்பியங்கள் திருஅவையின் அங்கங்களாக இருப்பதனால் ஏழு நற்குணங்கள் அதற்கு இருக்க வேண்டும்.

1. இறைவார்த்தையால் உரம் பெற்றிருக்க வேண்டும்.
2. திருஅவைக்கு எதிரான திட்டமிட்ட எதிர்ப்புணர்வைத் தவிர்த்து திருஅவையுடன் ஒத்துழைக்கும் உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
3. தனிப்பட்ட சமூக அமைப்பாக மாறும் அபாயத்தைத் தவிர்க்க தலத்திருஅவையுடனும், சர்வதேச திருஅவையுடனும் வேரூன்றிய உறவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. பங்குப்பணியாளர்களுடன் உண்மையான உறவுடன் வாழ்தல்
5. தொடர்ந்து நற்செய்திப் பணியில் ஆர்வம், கடமை பற்றிய விழிப்புணர்வுடன் இருத்தல்
6. அன்பியம் மட்டுமே திருஅவையின் நற்செய்திப் பணிக்கான கருவி அல்ல என்ற உணர்வு
7. எல்லா நிலைகளிலும் சர்வதேச திருஅவையை ஒத்திருத்தல் பிளவு மனப்பான்மையைத் தவிர்த்தல் வேண்டும்.

இவ் ஏழு குணங்களுமிருப்பின் அன்பியங்கள் (அ.தி.ச – சி.கி.கு) திருஅவைக்கு நல்ல பயனை அளிக்க முடியும். என்பது திருத்தந்தை 6ஆம் சின்னப்பரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

1987இல் கூடிய பொதுநிலையினரின் மகாநாட்டைத் தொடர்ந்து 1988ஆம் ஆண்டு திருத்தந்தை அருள் சின்னப்பர் பொதுநிலையினர் மறைத்தூது என்ற சுற்று மடலை வெளியிட்டார். இச்சுற்று மடலில் அன்பியங்கள் திருஅவையின் உயிர் நாடித்துடிப்பின் அடையாளம் என்று திருத்தந்தை கூறியுள்ளார். இச்சுற்றுமடல் எண் 26இல் உண்மையான சிறிய கிறிஸ்தவ சமூகங்களை (குழுமங்களை) அன்பியங்களை உருவாக்க வேண்டியது பங்குப்பணியாளர்களின் கட்டாயக் கடமையாகும். இந்த சிறிய கிறிஸ்தவ சமூகங்களை உயிரோட்டமுள்ள சமூகங்களாகத் திகழ்வதால் இறைவார்த்தைப் பகிர்வு, உறுப்பினர்களுக்கிடையில் நட்புறவு, பிறரன்புப் பணிவிடையில் அதை வாழ்வு பெறச்செய்வதும் கட்டாயமாக இடம் பெறல் அவசியம். இதனால் அன்பியங்கள் திருஅவையின் உண்மையான ஒன்றிப்பின் அடையாளங்களாகவும் தங்களது பங்குப் பணியாளர்களுடன் இணைந்து நற்செய்தி அறிவிப்புப் பணி புரியும் மையங்களாகவும் திகழ்கின்றன என்றும் கூறியுள்ளார். புதிய திருஅவை மயமாக அன்பிய வாழ்வே கிறிஸ்தவ வாழ்வு என்பதை உணர்வோம்.

கத்தோலிக்க திருஅவை வரலாற்றிலே 2ஆம் வத்திக்கான் சங்கம் ஒரு முக்கிய திருப்புமுனை அல்லது ஒரு மைல் கல் எனலாம். நிறுவனமயமாகிப்போன திருஅவையைப் பொது நிலையினரின் பங்கேற்பு மிகுந்த திருஅவையாக மாற்றி அமைத்தது 2ஆம் வத்திக்கான் சங்கமேயாகும். ஆன்மீக வாழ்வு, லௌகீக வாழ்வு என்று கூறுபோடாமல் ஆன்மீகம், வழிபாடு, பொருளாதாரம், சமூகம், அரசியல், குடும்பம், கல்வி கலை கலாச்சாரம் என்று மனித வாழ்வின் அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய முழு மனிதக் கண்ணோட்டத்தை வழங்கியதும் 2ஆம் வத்திக்கான் சங்கமேயாகும். இறையாட்சியை மலரச் செய்வதையே தனது இலட்சியமாகக் கொண்ட அமைப்பே தலத்திருஅவை. இந்த தலத்திருஅவையின் இலட்சியமான இறையாட்சியை மலரச்செய்யும் மகத்தான கருவிதான் அன்பியம் என்று உணரச்செய்ததும் இந்த 2ஆம் வத்திக்கான் சங்கமேயாகும்.

அன்பியம் என்பது ஒரு பக்திச்சபையோ, சமூகசேவைச்சங்கமோ, மக்கள் இயக்கமோ, செபக்குழுவோ அல்ல. மாறாக மனித வாழ்வின் அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கியதாக இறைவார்த்தையின் ஒளியில், உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில், தூய ஆவியானவரின் ஆளுகைக்குள் வாழமுற்படும் ஒரு குட்டித் திருஅவை ஆகும்.

அன்பியங்கள் மனித வாழ்வின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் நோக்கமுடையது என்பதால் அன்பியங்களை பொழுதுபோக்குத் தளங்களாக, சமூகசேவை குழுக்களாகவோ, வெறும் செபக்குழுக்களாகவோ மாறிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பங்கு பணியாளர்களின் கடமையாகும்.

உலகில் அன்பியங்கள் பல்வேறு பெயர்களுடன் இயங்கி வந்தாலும் அடித்தளத் திருஅவைச் சமூகங்கள், அடித்தள கிறிஸ்தவ சமூகங்கள், சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் தமிழ் கூறும் நல்லுலகில் அன்பியங்கள் என்ற நான்கு பெயர்களுமே பிரபல்யமானவைகளாகும்.

இந்த அன்புச் சமூகத்தில் எல்லா வயதினரும் எல்லாத் தரப்பினரும் பாகுபாடுகள் அற்ற உறுப்பினர்கள் சம உரிமை உடையவர்கள். அயலில் உள்ள 10 அல்லது 15 குடும்பங்கள் ஒன்று கூடி ஒருமனப்பட்டவர்களாக ஒற்றுமையாக ஒருதாய் பிள்ளைகள் போல் வாழ்வதும் கூடிச்செபித்து கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பதிலும், ஒருவரை ஒருவர் அறிந்து, புரிந்து ஏற்றுக்கொண்டு மதித்து, மன்னித்து விட்டுக்கொடுத்து இருப்பவர்கள், இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ்ந்தும் புனித பவுலடியார் கூறுவது போல மகிழ்வாரோடு மகிழ்ந்து அழுவாரோடு அழுதும் பிறரது இன்ப துன்பங்களில் ஆதரவுக்கரம் நீட்டி ஆறுதல் அளித்து அயலவர்களை அன்பு செய்து வாழ்வதும் தான் இதன் விசேடத்தன்மைகளாகும். பங்கின் பக்திச்சபைகள், இளைஞர் இயக்கங்கள், செபக்குழுக்கள் எல்லாம் பல இடங்களிலிருந்தும் வந்துதான் கூடுவார்கள். ஆனால் அன்பியமோ அயலில் பக்கத்துப் வீட்டிலிருந்து வந்துதான் கூடுவார்கள்.

இதுவரை மறைக்கல்வி, விவிலியக்கல்வி, மறைபரப்புப்பணி போன்றவற்றின் தயாரிப்பாளர்களாக குருக்கள், அருட்சகோதர சகோதரிகள் தான் இருந்து வந்துள்ளனர். பொதுநிலையினர் வெறும் பார்வையாளர்களாகவும், வாடிக்கையாளர்களாக மட்டுமே இருந்தனர். ஆனாலும் அன்பியங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமை மாற்றமடைந்து பொதுநிலையினரே விவிலியக்கல்வி, நற்செய்திப்பணி, திருஅவை நிர்வாகம் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்யும் நிலைமை உருவாகியுள்ளது. மேலும் அன்பியமே திருஅவையின் அடிப்படையான தளம் என்பதை உணர்த்துகின்றது. கிறிஸ்தவத்தின் அடிப்படைப் பண்புகளான நம்பிக்கை, பரிசுத்தம், அன்புறவு, அருளடையாளம், வழிபாடு போன்றவை அன்பியங்களில் காணக்கூடிய விதத்திலும் உணரக்கூடிய விதத்திலும் வாழ்ந்து பிரச்சனைகளை சவால்களை சந்திக்கும் திறமையை பெலத்தை அளிக்கக்கூடியதாக மாறுகிறது.

அன்பிய உறுப்பினர்களிடையே எழுகின்ற பல்வேறு பிரச்சனைகளையும் நற்செய்தியின் ஒளியில் இயேசுவின் வழியில் விவாதித்து ஒருமித்த முடிவுகளை எட்டுகின்றனர். சுயலாபங்களை நோக்கமாகக் கொண்டவர்களையும், சுயநலமாக வாழ்ந்தவர்களையும் ஏன் ஒதுங்கி வாழ்பவர்களையும் கூட சமூக அக்கறையுள்ளவர்களாக மாற்றியுள்ளது மாறியும் வருகின்றது.

தொடரும்...



# திருச்சிலுவையின் மகிமையின் விழாவும் திருச்சிலுவைக்கன்னியர்களின் வாழ்வும்

அருட்சகோதரி: றோமலா அன்ரனி
திருச்சிலுவைக்கன்னியர் சபை, யாழ்ப்பாணம்.

கத்தோலிக்க திருஅவை திருச்சிலுவையின் மகிமையின் திருவிழாவை புரட்டாதி 14ஆம் நாள் நினைவூட்டி தியானிக்க அழைக்கின்றது. திருச்சிலுவையின் மகிமை என்னும் போது இறையன்பின் வெளிப்பாட்டின் வெற்றியை குறிக்கின்றது. இயேசு இல்லாத சிலுவை வல்லமையற்றது. இயேசு சிலுவையில் அறையப்பட்டதனால் மரணத்தை வெற்றி கொண்டது மட்டுமல்ல விண்ணக வாசலையும் நமக்காகத் திறந்து வைத்தார். இதனால் திருச்சிலுவை மனித குலம் முழுவதிற்கும் நம்பிக்கையின், மீட்பின், இரட்சிப்பின் சின்னமாக மாறியது.

இயேசு தம்மேல் கொண்ட அன்பு மிகுதியினால் சிலுவை மரணத்தை ஏற்று பாடுபட்டு இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததினால் சிலுவை வாழ்க்கை வரமாக மாறியது. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் சிலுவை யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும், இருக்கின்றது. மீட்புபெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை (1கொரி 1:23) என குறிப்பிடுகின்றார்.

மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வல்லமையை விட இறை வலுவின்மை வலிமைமிக்கது. திருச்சிலுவையின் மகிமை பற்றிச் சிந்திக்கும் போது சிலுவையை எமது உடலில் தாங்கிச் செல்வதனால் பெருமையடைவது மட்டுமல்ல சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நம் வாழ்வால் பறைசாற்றவும்,முதன்மைப்படுத்தி வாழவும் அழைக்கப்படுகின்றோம். திருச்சிலுவையை மரியாதை செய்து முன்னுரிமை அளிக்கப்படுவது பற்றி கத்தோலிக்க மறைக்கல்வி ஏட்டில் (CCC617) குறிப்பிட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Council of Trent கிறிஸ்துவின் தியாகத்தின் தனித்தன்மையை நித்திய இரட்சிப்பின் ஆதாரமாக வலியுறுத்தியுள்ளது. திருச்சிலுவையை எவ்வாறு எமது வாழ்வில் மகிமைப்படுத்த முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். புனித லூக்கா நற்செய்தியில் இயேசு தன் சீடராக இருக்க விரும்பினால் (லூக் 9:23-24) “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என குறிப்பிடுகின்றார். கிறிஸ்தவர்களின் வாழ்வு சிலுவையின்றி பயணிப்பதாக இருக்காது நமக்கு தினம் தினம் வருகின்ற துன்பங்களுடன் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றவும் தன்னலமற்ற மனநிலையுடன் இறைவனையும் பிறரையும் அன்பு செய்து வாழவும் உள்ளத்தில் அமைதி இழந்து தவிக்கும் மானிட இதயங்களைத் தேடி வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்தவும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

திருச்சிலுவைக் கன்னியர்களின் வாழ்வில் திருச்சிலுவை மையமாக விளங்குகின்றது. “சிலுவையில் தான் இரட்சணியம்” என்பதனை சபையின் விருதுவாக்காகக் கொண்டு 90 வருடங்களை கடந்து இலங்கை மண்ணில் பணிபுரிந்து வருகின்றோம். ஒன்பது மாகாணத்திலும் எமது குழுமங்கள் ஊடுருவி கல்விப்பணி, சுகநலப்பணி, சமூகப்பணி, மறைக் கல்விப்பணி, உருவாக்கல்பணி, உள வள ஆற்றுப்படுத்தல் என பலதரப்பட்ட பணிகளில் தம்மை இணைத்து திருச்சிலுவையை தமது அர்ப்பண வாழ்வினால் மகிமைப் படுத்துகின்றார்கள். இறையரசின் மதிப்பீடுகளை தாம் வாழ்ந்து காட்டியும் பிறருக்கு முன்மாதிரியாக விளங்குவதுடன் இன மத மொழி பேதங்களைக்கடந்து இலங்கையில் எல்லா பிரதேசங்களிலும் பணிசெய்ய ஆர்வமுடன் விரைகின்றார்கள்.

கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்பணி தியோடோசியஸ் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு 1844ஆம் ஆண்டு தமது வழிநடத்தலில் முதல் அர்ப்பணத்தை மேற்கொண்ட அருட்சகோதரிகள் திருச்சிலுவையை தாங்கியவர்களாகவும், புனித பிரான்சிஸ் அசிசியின் 3ஆம் கட்டளைக்கு கீழ் இயங்கும் ஒரு துறவறசபையாக மிளிர வேண்டுமென தீர்மானித்தார். அவரது ஆசையை எமது சபையின் முதல் அருட்சகோதரியாக உருவெடுத்த ஸ்தாபகர் அன்னை பேர்ணாடா நிறைவேற்றி திருச்சிலுவைக் கன்னியர் துறவற சபையாக இன்று வரை பயணித்திட 180 வருடங்களுக்கு முன்பாகவே வித்திட்டவர்.

இளம் உள்ளங்களுக்கு கல்வியறிவை வழங்குவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர்களின் பணியை கால நீரோட்டத்தில் ஏற்பட்ட சமூக, சமய, சூழல், அரசியல், அனர்த்த மாற்றங்களுக்கேற்ப “காலத்தின் தேவையே இறைசித்தம்” என தமது பணிகளில் பிரிவுகளை ஏற்படுத்தி இலங்கையில் 22 பிரதேசங்களில் விஸ்தரிப்பு செய்துள்ளனர் என்றால் மிகையாகாது. ஒரு மனித வாழ்வின் கருவறை தொடக்கம் கல்லறை வரை எமது பணி பல்வேறு வழிகளில் பக்கபலமாக விளங்கி வருகின்றது. இதற்கு சான்றாக வைத்தியசாலைகள், பாடசாலைகள், முதியோர் இல்லங்கள் என இன்றும் திருச்சிலுவை கன்னியங்கள் தமது சேவையை முன்னெடுக்கின்றனர்.

இன்றைய இளந்தலைமுறையினர் சமூக ஊடகங்களிலும் இணைய வலைத்தளங்களிலும் தம்மைத் தொலைத்து ஒழுக்க விழுமியங்கள், சமயம் சார்ந்த பக்தி மரியாதைகள், மனித மாண்பை மதிக்கும் பண்புகள், போன்ற மனித இயல்புகளை இழந்துவிடுகின்றனர். இதன் விளைவாக ஆசிய நாடுகளிலும் கூட இறையழைத்தல்கள் அருகி வருகின்றன. இந்நிலையில் துறவற சபைகளின் ஆரம்பநிலை பணிநோக்கங்களை இலக்கு நோக்கி நகர்த்துவதும், தக்கவைப்பதும் சவால் நிறைந்ததாக இருந்த போதிலும், திருச்சிலுவைக் கன்னியர் சபையின் தனித்தன்மை குன்றாது தொடர்ந்து பயணிக்கச் செய்வது இறைவனின் வல்ல செயலே எனவே திருச்சிலுவையை எமது உடலில் தாங்கிச் செல்லும் போதெல்லாம் இயேசுவை பிரதிபலிக்கவும், இறைவனை எமக்கடுத்திருப்பவரில் கண்டு கொள்ளவும், முன்மாதிரிகையாக வாழவும், ஓர் அழைப்பு நினைவூட்டப்படுகின்றது.

## 50 அருட்பணி. அன்ரனி லியோ அடிகளாரின் பொன் விழா வாழ்த்து மடல்

கருவினிலே உமைத் தேர்ந்தெடுத்தார் எம் இறைவன்
கண் இமை போலே காத்திட்டார் அனுதினமும் பாரினிலே
கள்ளமில்லா மனம் கண்டு அகமகிழ்ந்து உம்மை
கடல்போல நற்செய்தியை பரப்பிட அழைத்திட்டாரே

உன் திருப்பொழிவை உலகம் காணவே
உன் வாழ்நாளை திருப்பணிக்காய் அர்ப்பணித்தீரே
ஆற்றலுடன் திறமையினை வளர்த்திட்டே
ஆர்வமுள்ள நற்பணியாளராய் உதித்தீரே

அயராது பணி செய்த நற்செய்தியாளனே
அன்றிலிருந்து ஐம்பது வருடங்கள் கடந்தீரே நல் ஆயனாய்
இறை மக்களின் இருளின் ஒளியாய் மிளிர்ந்தீரே
இரக்கத்தையும் அன்பையும் சுமந்தீரே தோளில் உன் பையுடனே

உருண்டோடும் உலகில் வரும் துன்பங்களை
உம் வார்த்தைகளின் ஆறுதலாய் உடைத்தெறிவீரே
சுனாமியோ சூறாவளியோ உன் உள்ளமே சுற்றியிருக்கும்
திருஅவையினரின் துன்பக் காணிக்கைப் பெட்டகமே

சிறுவர் குழாமும் சிதைந்த குடும்பங்களும்
சிறுகதை சொல்லுமே உன் அருகமர்ந்து
உத்தம சீடனாய் இறைவனின் தூதனாய் உன்
உதட்டின் புன்னகையிலே கவலை மறக்கச் செய்வீரே

என்றோ நாம் செய்த தவத்தின் பயனாய்
எம்மோடு பணி செய்த அன்ரனி லியோ அடிகளே
ஐயமின்றி நீர் செய்திட்ட அரும்பணிகள்
ஐம்பதாண்டை கடந்திட்ட போதிலும் உம்
பணியைப் போற்றிட வார்த்தைகள் தேவையே ஆயிரம்

நல்லாயனே நீடுழி வாழ உமை வாழ்த்தும் உள்ளங்களாக
உமதருகில் நாம்

**ஸ்ரெலா ஜெரோமம் (புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு)**

## இறை வேண்டல்

உள்ளே உருவின்றி இருக்கும்
உனை நான் அறிவேனே
எல்லா வளமும் உலகில் தந்து
உயிர்களை ஆட்கொண்டோனே

என்னை இவனாய் ஆக்கும்
உந்தன் ஒளியில் நனைவேனே
எல்லையில்லா பரவசமாய் இருளில்
உன் வெளிச்சம் காண்பேனே

பொல்லா துயர் நீக்கும் உந்தன்
பொது விதி மருத்துவம் அறிவேனே
மூச்சினில் இருக்கும் சூட்சுமம் அறிந்தே
ஓர் குருவால் உன்னைக் காண்பேனே

ஆதியும் அந்தமுமானவனே
ஆகமவிதிகள் அறிந்தவனே

தேகத்தில் நறுமணங் கொண்டு
தேர் வீதியில் நீர் வர உன்
கைபிடித்து அழைத்து செல்லும்
தேர்வடம் நாமாகிட வேண்டும்.

கடவுள் என்பவன் கடந்து நிற்பவன்
நமது அறிவால் அவனை அளக்க
முடியா தென்றே கூறிட வேண்டும்.

விண்ணைக் காகிதமாக ஆக்கி
கடலின் நீரை மையாய் மாற்றி
மரங்களை எழுது கோலாய் எடுத்து
எழுதினாலும் பரம் பொருள் புகழை
எழுதி முடித்திட இயலா தப்பா!

தியானம் செய்து அவன் புகழ் பாடி
போற்றுவோமே அனுதினம் நாமும்
அவனைக் தொழுது அவனிடம் அழுது
நீக்கிடுவோமே உயிரின் பழுது.

M. ஹின்ஷியா

## திருமலைத் தீபத்தின் இம்மாதப் பக்கம் பாலையூற்று லூர்து அன்னை திருத்தல இறை மக்களின்

# செபமாலை



திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்களுடைய காலத்தில், கத்தோலிக்க மக்களுக்கு துருக்கி நாட்டினரால் பல அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே திருஅவையின் பாதுகாப்பிற்காகச் செயற்படும் படியாக திருத்தந்தை ஐரோப்பிய மக்களைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் திருத்தந்தையின் வேண்டுகோளுக்கினங்க ஓர் இராணுவப் படையை ஏற்படுத்தினார்கள். இருப்பினும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கான பயிற்சி அவர்களிடம் காணப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட தினத்திலே செபமாலையைப் பக்தியுடன் செபித்துக்கொண்டே போர்க்களம் நுழைந்தார்கள்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது செபமாலையைச் செபிக்கும் படியாக ஐரோப்பிய மக்களை திருத்தந்தை 5ஆம் பயஸ் கேட்டுக்கொண்டார். உரோமையில் ஓர் செபமாலைப் பேரணியும் இடம்பெற்றது. “லெபன்டோ” எனுமிடத்தில் வைத்து ஐரோப்பியப் படையினர் துருக்கிய இராணுவத்தை வெற்றி கொண்டனர். இந்த யுத்தத்தில் எமது ஐரோப்பிய இராணுவம் தோற்கடிக்கப்பட்டிருந்தால் துருக்கிய இராணுவம் இத்தாலியைக் கைப்பற்றி உரோமையின் அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கும். துருக்கியின் சுல்தான் உரோமையின் பேரரசனாகி இருக்கக்கூடும். கி.பி 1571ஆம் ஆண்டு ஐப்பசி 07ஆம் நாள் பெற்றுக்கொண்ட இந்த வெற்றி செபமாலைப் பக்தியினூடாகவே பெறப்பட்டது என்று நம்பினார்கள்.

இதன் நிமிர்த்தமாக திருத்தந்தை 5ஆம் பயஸ் அவர்கள் ஐப்பசி மாதம் 07ஆம் திகதியினை “வெற்றிமாதா திருவிழா” என்று பெயரிட்டார்.

பின்னர் 1573ஆம் ஆண்டு இவ்விழா “செபமாலை அன்னை விழா” என திருத்தந்தை 13ஆம் கிரகோரியினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும் 1716ஆம் ஆண்டு முழுத் திருஅவையும் இவ்விழாவினைக் கொண்டாட வேண்டுமென திருத்தந்தை 11ஆம் கிளமன்ட் பணிப்புரை வழங்கினார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் பேதகங்களின் போதும் திருஅவையானது செபமாலையை செபிப்பதன் பயனாக எதிர்கொண்ட பல சவால்களை வெற்றி கொண்டது. இதனால் செபமாலை பக்தியில் வளர்ந்து அதனைச் செபிக்கத் திருஅவைத் தாய் அனைத்து மக்களையும் அழைக்கின்றாள்.

றோமன் ஜெபரட்னம் ஜேசன்

---

# வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்து...

செல்வன். நிர்மலராஜன் டானியல்

இரு ஊர்களிடையே பாலைவனமொன்று காணப்பட்டது. குறித்த ஊர்களிலிருந்து பயணிப்போர் அப் பாலைவனமூடாகவே பயணிக்க இயலும்.

ஒரு நாள் அவ்வழியே சிற்பி ஒருவர் பயணித்தார். அங்கே இரு பாறைகளை அவதானித்த அவர் ஒன்றின் அருகே சென்று “நான் உன்னை செதுக்க அனுமதிப்பாயா? செதுக்கிய பின் நீ அழகாய் இருப்பாய்” என்றார். அதற்கு பாறை “அப்படியா! செதுக்குவதற்கு உனக்கு எவ்வளவு காலம் தேவை?” எனப்பாறை வினவியது “மூன்று மாதங்கள் போதுமானது” என்றான் சிற்பி. “மூன்று மாதங்களா? ஐயோ வேண்டாம். மூன்று மாதங்களும் வலியை அனுபவிக்க வேண்டுமே” என முதலாவது மறுத்துவிட்டது.

ஏமாற்றமடைந்த சிற்பி இரண்டாவது பாறையிடம் சென்று வினவிய போது “சரி நீ என்னைச் செதுக்கி அழகாக்கு நான் வலியைத் தாங்கிக் கொள்கிறேன்” எனக் கூறிச் சம்மதித்தது.

சிற்பியும் தன் திறமைகளை சிறப்பாகப் பயன்படுத்தி அப்பாறையை மிக அழகிய சிற்பமாக்கினார். அவ்வழியே பயணித்தவர்கள் அதன் அழகால் கவரப்பட்டு இரசித்ததுடன் பலர் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களிலும் பதிவிட்டுப் பகிர்ந்தனர்.

குறித்த சிற்பம் பிரபல்யமானது. அதனைப் பார்வையிடவும் வணங்குவதற்கும் மக்கள் வருகை தர ஆரம்பித்தனர். பக்தர்கள் குறித்த தெய்வச் சிற்பத்திற்கு வழிபாடு செய்து அருகில் உள்ள பாறைமீது தேங்காய்களை எறிந்து உடைத்தனர்.

ஐயொ பரிதாபம்! தினம் தினம் பக்தர்களால் தேங்காய் உடைக்கப்படும் வேளைகளிலெல்லாம் அப்பாறைக்கு வலித்தது. “சிற்பியின் மூன்று மாதகால வலியைத் தாங்கியிருப்பின் தற்போது மதிப்புள்ள தெய்வச் சிற்பமாக மாறியிருப்பேனே? எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறியதால் வாழ்நாள் முழுவதும் வலியை அனுபவிக்க வேண்டியதாயிற்றே” என்று முதற்ப்பாறை மனம்வருந்தியது.

எனவே கற்பதற்கும், நற்பழக்கவழக்கங்களைப் பழகுவதற்கும் இறைவார்த்தையால் வழங்கப்பட்ட மாணவப்பராயத்தை சரியான



முறையில் பயன்படுத்தத்தவறின் வாழ்நாள் முழுவதும் நாம் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

இறைவேண்டல் என்பது, இறைவனின் உடனிருப்பை ஆழமாக உணர்வதாகும். இது எமக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும், வழிகாட்டலையும் தரவல்லது. இறைவேண்டலில் நிலைத்திருக்கும் போது கடவுளின் திருவுளத்தை அறிந்து அதற்கேற்ப எம்வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும். இறைவேண்டலில் நிலைத்தவர்களாய் சிற்பியாம் இறைவனின் கைவண்ணத்தில் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நல்லமுறையில் பயன்படுத்தி கற்று சமூகத்தில் மதிப்பாகவும், சிறப்பாகவும் இறைவனுக்குகந்த பிள்ளைகளாய் வாழ்வோம்.

# மறையாசிரியர்களுக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி



தேசிய மறைக்கல்வி நடு நிலையத்தினால் 11 மறைமாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட மறையாசிரியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் பயிற்சிக் கருத்தமர்வானது ஆவணி மாதம் 17ம் திகதியிலிருந்து 19ம் திகதிவரை றாகம - தேவத்தை தியான இல்லத்தில் நடைபெற்றது. நடுநிலையத்தின் பிரதம இயக்குனர் அருட்பணி. பெனட் சாந்த அடிகளார் தலைமையிலும் நடுநிலைய தமிழ் பிரிவு செயற்பாட்டாளர் அருட்சகோதரி P. ரஞ்சி (திருச்சிலுவை கன்னியர் சபை) அவர்களின் வழிகாட்டலிலும் இந்நிகழ்வுகள் நடந்தேறின.

இதில் ஏழு தலைப்பிலான விளக்க உரைகள் வழங்கப்பட்டது. (1) பிள்ளைகளின் உளவியலை அறிந்து கொள்ளுவோம், (2) சுற்றுப்புற சூழலும் மறைக்கல்வியும், (3) திருவழிபாடு பற்றிய 2ம் வத்திக்கான் சங்க வெளியீட்டின் வழியாக கருத்துள்ள, ஆழமான கிறிஸ்தவ ஆன்மீகத்தை நோக்கி (4) 2024 இறைவேண்டுதல் ஆண்டின் வழியாக 2025 ஜுபிலி ஆண்டிற்கு ஆயத்தமாகுவோம். (2ம் வத்திக்கான் சங்க " இறை வெளிபாடு" மற்றும் 2025 ஜுபிலி ஆண்டு பற்றி வத்திக்கான் சுற்றுமடலிலிருந்து (5) 'திருஅவை' மற்றும் 'இன்றைய உலகில் திருஅவை' ஆகிய வத்திக்கான் சங்க ஏடுகளின் ஒளியில் பயணிக்கும் திருஅவையிலே, (Synodal Church) இன்றைய மறையாசிரியர்களின் பணியும் பங்களிப்பும், (6) இன்றைய நவீன தொடர்பு சாதனங்களினால் மறைக்கல்விக்கு சவால்களும் அவற்றிக்கான பதில்களும் (சமூக தொடர்பு கருவிகள் பற்றிய 2ம் வத்திக்கான் சங்க வெளியீடு மற்றும் இன்றைய திருஅவையின் படிப்பினைகளிலிருந்து), (7) தற்கால இளைஞர் எதிர்நோக்கும் நன்நடத்தை தொடர்பான சவால்களுக்கு திருஅவை மறைக்கல்வி நூலிலிருந்து (C.C.C) விடை காண்போம் ஆகிய தலைப்புக்களைக் கொண்டதாக விரிவுரைகள் வழங்கப்பட்டன.

உரை வழங்கு வளவாளர்களாக வளவாளர்: அருட்கலாநிதி. என்டனி மரியதாசன் குருஸ் (ரொக்சன்) B.Ph (Rome), B.Th (Rome), Ph.D (Rome), அருட்பணி ஜோய் மரியரட்ணம் CMF, (BA philosophy, BTh, Licentiate in Bib-Tho), அருட்சகோதரர் R.J. ஜெயகாந்தன் SLPS 3, B.A (Hons), Dip.in.Edu, அருட்பணி S.M.S.]; CMF (Bph, BTh, Lic in comm.), திருமதி. டாக்டர் திருமதி சிந்தியா ராஜ்குமார் (திருமண, குடும்ப நல ஆற்றுப்படுத்துனர். BUMS Uni. Of. Col, MSc Uni. Of. Col) ஆகியோரால் சிறந்த தயாரித்தலுடனான காத்திரமான உரைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மறைமாவட்ட திருமறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. S. டியூக் வின்சன் அடிகளார் தமது மறைமாவட்டத்திலிருந்து பங்கு கொண்ட ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக கருத்தரங்கு முழுவதும் கலந்து கொண்ட போதிலும் ஏனைய ஆசிரியர்களையும் ஊக்குவித்தமை வரவேற்க தக்கதாக இருந்தது. கருத்தரங்கின் இரண்டாம் நாள் ஞாயிறு திருப்பலியானது ஏனைய குருக்களுடன் இணைந்து ஒப்புக் கொடுத்தார். பின் திருப்பலியின் நிறைவில் குழுவாக இணைந்து புகைப்படங்கள் எடுக்கப்பட்டது.

அதே போன்று மூன்றாம் நாள் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட திருமறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்கலாநிதி. என்டனி மரியதாசன் குருஸ் (ரொக்சன்) அடிகளார் ஏனைய குருக்களுடன் இணைந்து ஒப்புக் கொடுத்தார்.

சிறப்பான திட்டமிடலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது பயிற்சிக்கான தலைப்புக்கள் மற்றும் வளவாளர்கள் சிறப்பான வகையில் தெரிவு செய்திருந்தமை, வருகை தந்திருந்த பயிற்சியாளர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களே பயிற்சியை நகர்த்திச் செல்லுமாறு ஏற்பாடுகளை மேற்கொண்டமை, நவீன தொடர்பாடல் முறைமைகளை பயன்படுத்தியமை, உரிய நேரத்திற்குள் உரைகள் நடைபெற்றதுடன், உணவு மற்றும் சுத்தம் பேணல் ஏற்பாடுகளுக்காகவும் பயிற்சியாளர் குழுக்களைச் சிறந்த வகையில் பயன்படுத்தியமை, மேலும் பயிற்சிக்கான சிறந்த சூழல் கொண்ட இடத்தெரிவு, ஒருவரை ஒருவர் அறியாத மறை மாவட்டங்களைச் சேர்ந்த மறையாசிரியர்கள் ஒன்றிணைந்து செயற்பட வைத்தமை மற்றும் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன இதில் ஆசிரியர்களும் ஆர்வமுடன் பங்கேற்றனர். மேலும் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் திட்டமிட்ட செயற்பாடுகள் இப்பயிற்சிப் பாசறையின் நோக்கத்தை முழு அளவில் வெற்றி பெற வாய்ப்பளித்தமைக்கான பாராட்டக்கூடிய அம்சங்களாக் குறிப்பிடலாம்.

அறிவுசார்ந்த மற்றும் திறமைசார்ந்த வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்ள இது போன்ற பயிற்சிகள் இந்நாட்களில் இன்றியமையாதது என்பது உணரப்பட்டாலும் அதிக செலவுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சி நிகழ்வில் மறையாசிரியர்களாக புதிதாக இணைக்கப்பட்டவர்களின் பங்களிப்பும் சிறப்பாக இருந்தமையும் குறிப்பிடதக்கதாக உள்ளது.

தகவல்: நோபட் சுரேஸ் விதுஷா
(திருகோணமலை மறைமாவட்ட திருமறைக் கல்வி நடுநிலைய தமிழ் பிரிவு செயற்பாட்டாளர்)

# படித்ததில் பிடித்தது

சேவியர் அந்தோனி சே.ச



## அறிவு

ஓர் ஓவியக் கண்காட்சி
அதில் தத்ரூபமான ஓர் ஓவியம் அது.
இரண்டு எருதுகள்
மூர்க்கத்தனமாகச் சண்டை போடுகிற மாதிரி...
அவ்வளவு அட்டகாசமான ஓவியம் அது.

பார்த்தவர் அனைவரும்
அசந்து போய் நின்றனர்.

வரைந்த ஓவியர் பாராட்டு மழையில்
நனைந்து கொண்டிருந்தார்.

மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன்
காட்சிச் சாலையில் நுழைந்தான்.
ஓவியத்தைப் பார்த்துக்கொண்டே வந்தான்.

எருதுகள் சண்டையிடும் ஓவியத்தின் முன் நின்றான்.
உற்றுப் பார்த்தான் விழுந்து விழுந்து சிரித்தான்.

இதைக் கவனித்தார் ஓவியர்:
'தம்பி...
ஏன் சிரிக்கிறாய்?
ஓவியம் தத்ரூபமாக இல்லையா?'
'ஐயா...
ஓவியம் தத்ரூபமாத்தான் இருக்கு.
ஆனா.. ஆனா...'

மீண்டும் சிரித்தான்
குழம்பிப்போன ஓவியர் கேட்டார்:
'என்ன ஆனா...
ஓவியத்தில் என்ன குறை?
சொல்லிவிட்டுச்' சிரி!'

சிறுவன் சொன்னான்:
'ஒண்ணுமில்ல ஐயா...
எருதுக எப்பவுமே
ஒண்ணோட ஒண்ணு முட்டிக்கிட்டு
சண்டை போடுறப்போ...
அதோட வாலைப் பின்னங்கால் ரெண்டுக்கும் நடுவே
இடுக்கி வச்சுக்கும்.
ஆனா...
நீங்க வரைந்த படத்துல ரெண்டு எருதுகளும்
வால மேலே தூக்கிக்கிட்டிருக்கே!'

நமட்டுச் சிரிப்போடு முடித்தான்:
'இந்தப் படத்துல இருக்கிற மாதிரி
ரெண்டு எருதுக சண்டை போடுறத
ஊரு உலகத்துல
யாருமே...
எங்கயுமே...
பார்த்திருக்க முடியாது.'

**பட்டறிவுக்குப் பக்கத்துல வரமுடியுமாங்க உங்க பட்டத்து அறிவு?**

**நுட்பத்தோடு எதார்த்தமும் சேர்ந்தால்தான்தத்ரூபம்!**

# விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே...



அருட்பணி :
அ. அ. நவரெத்தினம் (நவாஜி)

இறைவேண்டல் ஆண்டுப் பயணத்தில் பயணிக்கின்ற நம்பிக்கையின் திருப்பயணிகளாகிய அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் இயேசு கற்பித்த இறைவேண்டல் எனும் தியானப் பயணமதில் அதன் முதல் வார்த்தையாகிய 'விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே' என்கிற சொற்றொடரை எடுத்து அணுகுவோம்.

### "எங்கள் தந்தையே"

இயேசு கற்பித்த இறைவேண்டலின் ஆரம்ப சொற்களை கவனிக்கின்றபோது, இங்கே இயேசு தந்தையாகிய இறைவனை 'எனது' தந்தையே என்று அழைக்காமல் 'எமது' தந்தையே என்று அழைப்பது சிறப்பாகும். இதனூடாக இயேசு தெளிவாகக் கற்பிப்பது யாதெனில் மூவொரு கடவுளின் முதலாம் ஆளாகிய தந்தையாகிய கடவுள் அனைவருக்குமான இறைவன். அவரை ஒரு சாராருக்கு உரித்தானவர் என்றோ, அல்லது கத்தோலிக்க கிறிஸ்தவருக்கு மட்டும் உரித்தானவர் என்றோ உரிமை கொண்டாட முடியாது. அவர் அனைவருக்குமான இறைவன். உலகு வாழ் எல்லா இனக்குழுவினர், மொழிக்குழுவினர், சமயக்குழுவினர் அனைவருக்கும் சொந்தமானவர். அவர் எங்களுக்கு மட்டும்தான் சொந்தமானவர் என்று யாருமே உரிமை கொண்டாட முடியாது.

'பிள்ளைக்கு தந்தை ஒருவன், நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்' என்று சொல்லுமாற்போல் இறைவன் உலக மாந்தர் அனைவருக்குமானவர். இதனையே சைவ சமயத்தில் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகத்தில் பாடுகிறார். அதாவது தென்னகத்தில், தமிழகத்தில் உன்னை சிவனாக காண்கிறோம், அவனை உலக மாந்தர் அனைவரும் இறைவனாகக் காண்கிறார்கள் என்பதாகும். நமது பழைய பாடலின் வரிகள் இதனை இன்னும் அழகாக 'இறைவன் நமது வானகத் தந்தை இதனை உணர்ந்தாலே குளிர்ந்திடும் சிந்தை'. நாம் இறைவனை தந்தையே என்று அழைப்பதற்கு மிக முக்கியமான காரணி இயேசுகிறிஸ்துவே. அவரே நமக்கு தந்தையை வெளிப்படுத்தியவர்.

'எங்கள் தந்தையே' என்கிற வார்த்தையானது மாந்தர்கள் இறைவனோடு கொண்டுள்ள இணைந்த உறவினை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. அதுமட்டுமல்லாது இறைவேண்டலின், நம்பிக்கையின் சமூகப் பரிமாணத்தை வெளிக்கொணர்கிறது. “இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்” (மத்தேயு 18:20) என்கிற இறைவார்த்தைக்கு சான்று பகர்வதாகவும் அமைகிறது. இங்கே இறைவன் என்பவர் தனிப்பட்டவருக்கு சொந்தமானவர் அல்ல மாறாக அனைத்து மானிட சமூகத்திற்கும் உரித்தானவராவார் என்பது வெளிப்படையாகிறது. இறைவனை 'தந்தையே' என்று அழைப்பதானது, மனிதர்களுக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கமான உறவினைப் பறைசாற்றுகிறது.

அதாவது இறைவன் என்பவர் மிகவும் அன்புள்ள, பரிவுள்ளம் கொண்ட பெற்றோராக இருக்கிறார். பிள்ளைகளின் நலன்களில் அக்கறையாக உள்ளார். அவரை மாந்தர் இலகுவாக அணுகிட முடியும் என்பது தெளிவாகிறது.

### "விண்ணகத்திலிருக்கிற..."

இவ்வார்த்தையானது இறைவனின் உறைவிடத்தைக் குறித்து நம்முடன் உரையாடுகிறது. உலகப் படைப்பு குறித்த தொடக்கநூல் 1:1 வார்த்தையில்: 'தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபோது,' அவ்வாறே 1 அரசர் 8:27 நோக்கும்போது: 'கடவுள் உண்மையில் இந்த மண்ணுலகில் தங்கியிருப்பாரா? வானமும் வான மண்டலங்களும் உம்மைக் கொள்ள இயலாதிருக்க...' என்கிற இரு வார்த்தைகளும் தெளிவாக சொல்வது யாதெனில் இறைவன் படைப்பினைக் கடந்தவர். எந்தவொரு மனித சிந்தனைகளுக்குள்ளும் சிக்க முடியாதவர். இறைவனின் உறைவிடத்தை மனிதர்களாகிய நாம் ஒரு இடம் சார்ந்து நோக்க முடியாது. அது மனித எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. இறைவன் எங்கும் நிறைந்தவர். எதிலும் உறைபவர். இதனையே 'உலகெலாம் அறிந்து ஓதற்கு அரியவன்' என்று சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் பாடுகிறார். அதாவது இறைவனையோ, அவரது உறைவிடத்தையோ மனித சிந்தைகளால் கணிப்பிட முடியாது. இதனையே 'உலகையும், அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர்' என்று திருத்தூதர் பணி 17:24 பறைசாற்றுகிறது.

எனவே இறைவனின் உறைவிடம் என்பது மனித சிந்தனைகளுக்கு உட்பட்ட 'இடம்' என்கிற நிலைக்கு அப்பால் அவரது தெய்வீகத்தையும், மாண்பினையும் பறைசாற்றுவதாகும். கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி நூலானது புனித அகுஸ்தீனாரை மேற்கோள் காண்பித்து விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே' என்பது நேர்மையாளர்களினது இதயங்களில் உறையும் இறைவனைக் குறிப்பதாகும், அதுவே அவரது புனித உறைவிடமாகும். அதேவேளையில், அவரை நோக்கி மன்றாடுவோர் அனைவரும் அவர் தம் இதயத்திலும், உள்ளத்திலும் உறைந்திட வேண்டுமென மன்றாட வேண்டும். (காண்க கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல்: எண்கள் 2794 – 2796. மனித பாவத்தால் அருள்நிலையினை இழந்த மனித குலம், இயேசுகிறிஸ்துவின் மீட்பினால் இழந்த வாழ்வினை பெற்றுக்கொள்ளும் வரத்தினைப் பெற்றுக்கொண்டது. 'இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார்' (எபேசியர் 2:6) என்கிற வார்த்தையினூடாக இறைவனின் உறைவிடமாகிய விண்ணுலகினை மானிடர்கள் யாவரும் கிறிஸ்து பெற்றுத் தந்த மீட்பினால் மீளவும் பெறுகிறோம்.

- இறையியல் சார்ந்து நோக்குகின்றபோது, இறைவன் தெய்வீக தந்தை என்கிற வார்த்தைப் பதமானது, நம்பிக்கையாளர்களை அவரது பாதுகாப்பிலும், வழிகாட்டலிலும், ஒழுக்க (புண்ணிய) நெறியிலும் நம்பிக்கை கொள்ளுமாறு சவாலுக்கு உட்படுத்துகிறது.

- இறைவனை எங்கள் தந்தையே என்று அழைப்பதன் வாயிலாக, நம்பிக்கையாளர்கள் இடையே ஓர் ஒற்றுமையினை உருவாக்குவதுடன், அவர்களுக்குள் நிலவும் பிரிவினைகளைக் கழைந்து, அவர்கள் கொண்டுள்ள ஒரே நம்பிக்கையில் பயணிக்க அழைக்கிறது.

- இறைவனின் இரு வகை இயல்புகளாகிய தந்தையாக மனிதர்களுக்கு அருகில் உலகில் இருப்பதும், விண்ணுலகில் இருக்கிறவராக உலகையும், மாந்தரையும் கடந்து நிற்பவராக சித்திரிக்கிறது. இதனையே வெகு அழகாக வேறு எந்த வார்த்தையும் பிரதிபலிக்காதத வண்ணம் 'கடவுள்'என்கிற தமிழ் வார்த்தை பிரதிபலிக்கிறது. 'கட'மாந்தரைக் கடந்து நிற்பவர். 'வு(உ)ள்' மாந்தருள்ளே உறைந்து நிற்பவர்.

### முடிவாக:

இறைவன் மனித சிந்தைக்கு அப்பாற்பட்டவராயினும், உறைபவராயினும், அவர் நம் அனைவரின் அன்புமிகு, இரக்கமிகு, பாசமிகு தந்தையாகவுள்ளார். அவரை நாம் அவரது உறைவிடத்தை சொல்லி அழைக்க இயேசு கற்றுத் தருகிறார். இயேசு கற்பித்த இறைவேண்டலின் முதல் சொற்றொடர் கடவுளுடனும், ஒருவர் ஒருவருடனும் கொண்டுள்ள உறவினைக் குறித்து எண்ணிப்பார்க்க அழைக்கிறது. கடவுளுடன் கொள்ளக்கூடிய தந்தைக்குரிய பரிவினையும், மறுபக்கத்தில் அவரை எட்டமுடியாத அவரது புனிதத்தையும், மாண்பையும் குறித்து சிந்திக்க அழைக்கிறது. இச்செபத்தினை ஒன்றாக வேண்டுகிற அனைத்து அடியார்களின் குழும வாழ்வையும், ஒன்றிணைந்த ஆன்மிக பயணத்தையும் எண்ணிட அழைக்கிறது. அன்பு நிறைந்த இறைவனின் உறைவிடத்தை அடைகின்ற பயணமதில் நாளாந்தம் பயணிக்கும் அனைத்து திருப்பயணிகளும் அவரை சிக்கெனப் பற்றிப் பிடித்துக் கொள்வோம்.

## புனிதர்களின் பாதையில்....



# புனித மரிய பவுஸ்தீனா

இறைவனின் அளவற்ற இரக்கத்தைப் பெற்று, அகிலமெங்கும் இறை இரக்கத்தை அறிவிக்கும் கருவியாய், விண்ணகத் தந்தையின் விருப்பமான பலிபொருளாய் மாறியவரே புனித மரிய பவுஸ்தீனா. இவர் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் நாள் போலந்து நாட்டின் க்ராகோவ் என்னுமிடத்தில் உள்ள க்ளோகோவெய்க் கிராமத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர் ஏழையர். அவர் கன்னியர் மடத்தில் சேர விரும்பியும் பெற்றோர் மும்முறை அனுமதி மறுத்துவிட்டனர்.

இறுதியாகத் தனது 20வது வயதில் இறை இரக்க அன்னையின் சகோதரிகள் நடத்தும் துறவற சபையில் சேர்ந்தார். வார்சாவில் துறவறப் படிப்பை முடித்து விட்டு 1928இல் முதல் வார்த்தைப்பாட்டைப் பெற்றார். போலந்திலுள்ள மடங்களில் அவரது படிப்பு குறைவு என்ற காரணத்தால் பல தாழ்ந்த வேலைகளைச் செய்து மறைந்த வாழ்வு வாழ்ந்து, தாழ்ச்சிக்கும் கடின உழைப்புக்கும் உதாரணமாக விளங்கினார்.

1931ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் நாள் நம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து இந்த எளிய சகோதரிக்குத் தோன்றி, எல்லா மனித குலத்திற்கும் இரக்கமுள்ள ஒரு அருமையான நற்செய்தியைக் கொண்டு வந்தார். சகோதரி பவுஸ்தீனா இந்த தேதியில் அவரது நாட்குறிப்பில் கீழே உள்ளவாறு கூறியுள்ளார்.

இன்று மாலை வேளையில் நான் என் அறையில் இருந்தபோது, வெண்ணிற ஆடை அணிந்திருந்த ஆண்டவராகிய இயேசுவைக் கண்டேன். அவரது ஒரு கரம் ஆசீர்வதித்தபடி உயர்த்தியும் மற்ற கரம் மார்பின் ஆடைப் பகுதியைத் தொட்டபடியும் இருந்தது. மார்பு ஆடையின் திறப்பிலிருந்து இரண்டு பெரிய ஒளிக்கதிர்கள் ஒன்று சிவப்பு நிறத்திலும் மற்றது வெளிர் நிறத்திலும் வெளிவந்தன.

நான் மௌனமாக ஆண்டவரைப் பார்த்த வண்ணம் அப்படியே ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தேன். என் ஆன்மா பயம் கலந்த மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் இயேசு என்னை நோக்கி. நீ இப்போது காணும் இந்த உருவத்தை "இயேசுவே நான் உம்மை நம்புகின்றேன்" என்ற சொற்களோடு அப்படியே வரைந்திடு என்றார்.

இரக்கத்தின் அரசரான இயேசு இவருக்குப் பலமுறை காட்சி தந்தார் இக்காட்சிகள் 1930இல் இருந்து 1938 வரை நீடித்தன. இறை இரக்கத்தின் பக்தியைக் குறித்து இயேசு அவருக்கு பல அறிவுரைகள் கூறினார். தமது வார்த்தைகளை பவுஸ்தீனா அவர்களின் கையேட்டில் எழுதிக்கொள்ளுமாறு பணித்தார். அவரது 600 பக்கங்களைக் கொண்ட நாட்குறிப்பிலிருந்தே இக்காட்சிகள் பற்றிய பல தகவல்களை அறியக் கூடியதாய் இருக்கிறது.

ஏனெனில் தமது ஆன்ம குருவையும் மடத்தலைவியையும் தவிர வேறு எவருக்கும் இந்தக் காட்சிகள் பற்றிய செய்தியை அவர் அறிவிக்கவில்லை. புனித மரிய பவுஸ்தீனா காச நோயால் பாதிக்கப்பட்டு மிகத் துன்புற்றார். இவர் தனது 33வது வயதில் க்ராகோவ் எனும் ஊரில் 1938ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

1966ஆம் ஆண்டு அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு மடத்தின் கோவிலில் வைக்கப் பட்டுள்ளது. 1993ஆம் அண்டு ஏப்ரல் 18ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் அவர்கள் பவுஸ்தீனாவை முக்திப்பேறு பெற்றவர் என அறிவித்தார். பின்னர் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் ஜான் பவுல் மரிய பவுஸ்தீனாவை "புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா" வாக அறிவித்தார்.

---

# இழப்புகள் தோல்விகளில்லை

மாணவர் தீபம்
மடல் – 05

**ஜோ. நோமன் பல்தஸார், ஓய்வு நிலை அதிபர்**

ஆடத்தெரியாத மயில்கள் இல்லை
கூவத்தெரியாத குயில்கள் இல்லை
நீந்தத்தெரியாத மீன்கள் இல்லை
ஓடத்தெரியாத மான்கள் இல்லை ஆனால்
கற்கத்தெரியாத மாணவனாய் இருந்து விடாதே
ஆரம்பம் ஜெபமாக இருந்தால்
முடிவு ஜெயமாக இருக்கும்

திருமலைத்தீபம் பத்திரிகையில் மாணவர்தீபம் என்று ஒரு பகுதியை உங்களுக்காகவே ஏற்படுத்தி இருக்கின்றார் இதன் ஆசிரியர்.

மாணவர் சமுதாயத்திலிருந்து இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் செய்தார். தரம் 10, க.பொ.த (சா), க.பொ.த உயர் தர மாணவர்கள் கூடவா எழுத முடியவில்லை. என்று கவலைப்படுகின்றார் ஆசிரியர் புரட்டாதி மாத இதழில் "மன்னித்தால் தவறா?" என்ற தலைப்பில் எழுதும்படி கேட்டிருந்தார். கடைசியில் அடிகளார் "மன்னித்தால் தவறா?" என்று மன்றாட வேண்டி இருந்தது. ஒரு பிள்ளைகூட எழுதவில்லை.

மார்கழி இதழில் டினுக்ஷியா ஜோயல்ஜிப்சன் என்ற மாணவியின் "மானிடனாய் பிறந்திடுவீர்" என்ற தலைப்பில் ஒரு கவிதை பிரசுரிக்கப்பட்டிருந்தது. தரம் 11 என போடப்பட்டிருந்தது. பாடசாலை மாணவராக இருக்கலாம் என ஊகித்தோம். புனித மரியாள் பேராலயம் என விலாசம் இடப்பட்டிருந்தது. பேராலய பங்கில் இருந்து அனுப்பியுள்ளதாக அறிகின்றோம். பாடசாலைப் பெயர் குறிப்பிடப்படவில்லை.

தெளிவாகக் கூறுகின்றோம் இனி கவனமாக இதைச் செய்யவும். ஏதேனும் பாடசாலையில் கற்பதாயின் உங்கள் ஆக்கங்களை எழுதிய பின் பாடசாலை அதிபரிடம் காண்பித்து அவரது ஒப்பத்துடனும் பாடசாலை முத்திரையையும் பொறித்து அனுப்பினால் அது மிக பொருத்தமாக இருக்கும்.

ஏனையோர் பாடசாலை கற்று முடித்தவர்கள் நீங்கள் வசிக்கும் பங்கின் குருவானவரிடம் ஒப்பமிட்டு பங்கு முத்திரையையும் பொறித்து அனுப்பினால் மிகச் சிறந்ததாக இருக்கும்.



என்ன எழுத வேண்டும்? கவிதை, கட்டுரை, சிறுகதை, உங்கள் பங்கின் முன்னேற்றம், பங்கு திருவிழா பற்றியும் எழுதலாம். மேற்படி தலைப்புக்களில் முதலில் எழுதி பயிற்சி பெறவும். போகப் போக உங்கள் எழுத்தாற்றல் வளர்ச்சி அடையும் பின் நிறுத்து என்று சொன்னாலும் நிறுத்த மாட்டீர்கள். எடுத்த பயிற்சி எழுதிக் கொண்டிருக்கவே முயற்சிக்கும்.

எப்போதும் நம்முடன் போட்டி போட ஒருவர் இருந்தால் தான் நாம் வேகமாக பயணிக்க முடியும். அது விளையாட்டானாலும் சரி வாழ்க்கையானாலும் சரி. மாணவர்களுக்கு உதவுவதற்கு பெற்றோர்களால் முடியும், மறைக்கல்வி ஆசிரியர்களால் முடியும், பாடசாலை ஆசிரியர்களால் முடியும், வளர்ந்த அனுபவம் உடையோரிடம் கேட்டு எழுதுங்கள் இவர்கள் எல்லோரும் உதவுவார்கள்.

மாணவர்கள் மட்டும் அல்ல வளர்ந்தோரும் எழுதலாம். பங்குத்தந்தையின் ஒப்பத்துடன் உங்கள் ஆக்கங்களை அனுப்பிவைக்கவும் கடந்த இதழ்களில் சில புதிய எழுத்தாளர்கள் எழுதியிருந்ததை அவதானித்துள்ளோம்.

மார்கழி மாதம் வரப்போகிறது. அது தொடர்பான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை போன்ற விடயதானங்களை இப்போதே அனுப்பி வையுங்கள் கடைசி வரை காத்திருக்க வேண்டாம். மாணவர்களோடு தான் நான் பேசிவந்தேன் இந்த இதழில் வேறு விதமாக உரையாட வேண்டி இருந்தது. அடுத்த இதழில் கண்டிப்பாக மாணவருடன் பேசுவேன்.

தொடரும்...

## திருத்தூதர் பணிகள்
## 05 – 08 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**கேள்வி பதில்**

1. அனனியாவும் சப்பிராவும் உயிர் விடக்காரணம் என்ன?

விடை:........................................................................................................

..................................................................................................................

2. யாருடைய நிழல் படுமாறு மக்கள் உடல் நலமற்றோரைக் கட்டிலிலும் படுக்கைகளிலும் கிடத்திச் சுமந்து கொண்டு வந்து வீதிகளில் வைத்தார்கள்?

விடை:........................................................................................................

3. சிறையில் அடைக்கப்பட்ட திருத்தூதர்களுக்கு ஆண்டவரின் தூதர் கூறியது என்ன?

விடை:........................................................................................................

4. திருத்தொண்டர்கள் எத்தனை பேர்? அவர்களின் பெயர்களைத் தருக?

விடை:........................................................................................................

..................................................................................................................

5. ஸ்தேவான் மீது கல்லெறிந்ததற்கான காரணம் என்ன?

விடை:........................................................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. எபிரேய மொழி பேசுவோர் தங்களுடைய கைம் பெண்கள் அன்றாடம் பந்தியில் முறையாக கவனிக்கப்படவில்லை என்று கிரேக்க மொழி பேசுவோருக்கு எதிராக முணு முணுத்தனர். ( )

7. ஸ்தேவானைக் கொலை செய்வதற்கு சவுலும் உடன்பட்டிருந்தார். ( )

8. தலைமைச் சங்கத்தார் திருத்தூதர்களை கொல்லத் திட்டமிடவில்லை. ( )

9. ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் செய்து வந்தார். ( )

10. எத்தியோப்பிய நிதியமைச்சருக்கு பிலிப்பு திருமுழுக்குக் கொடுத்தார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. அவர்கள் அடிமை வேலை செய்யும் நாட்டுக்குத் ____________________ வழங்குவேன். அதற்குபின் அவர்கள் ____________________ இவ்விடத்துக்கு வந்து என்னை வழிபடுவார்கள்.

12. உன் கால்களிலிருந்து ____________________ அகற்றிவிடு ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் ____________________

13. அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ____________________ போலும் உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத ____________________ அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்.

14. நாங்கள் கடவுளது ____________________ கற்பிப்பதை விட்டுவிட்டுப் ____________________ பணியில் ஈடுபடுவது முறைஅல்ல.

15. சிறியோர் முதல் பெரியோர்வரை அனைவரும் ____________________ கடவுளின் வல்லமை இவரிடம் உள்ளது என்று கூறி ____________________ செவிசாய்த்தனர்.

பெயர் :........................................................................................

முகவரி :........................................................................................

தரம் :........................................................................................

பங்கு :........................................................................................

முடிவுத்திகதி 2024.12.14

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 61
## எசாயா 30 – 34 அதிகாரங்கள்

1. இவனின் ஆற்றலில் இதைப் பெறவும் எகிப்தின் நிழலில் இதைத் தேடவும் போகின்றனர்.

விடை:........................................................................................................

2. இவர்கள் செய்யும் உதவி பயனற்றது. ஆதலால் நான் அவர்களை இவ்வாறு என அழைத்தேன்.

விடை:........................................................................................................

3. அழிவு நாளில் வானலாவிய மலைகள் அனைத்தின் மேலும் உயர்ந்த குன்றுகள் அனைத்தின் மேலும் இவைகள் தோன்றும்.

விடை:........................................................................................................

4. இவைகளால் தூற்றப்பட்டுச் சுவையூட்டப்பட்ட தீனியை நிலத்தை உழும் இவைகள் தின்னும்.

விடை:........................................................................................................

5. நீ இதைச் செய்தவுடன் உனக்கும் இதைச் செய்வார்கள். ஆண்டவரே எங்கள் மேல் இரக்கமாய் இரும்.

விடை:........................................................................................................

6. வீரர்கள் வீதியில் நின்று கதறியழுகின்றனர் இவர் மனங்கசந்து அழுகின்றனர்.

விடை:........................................................................................................

7. ஆண்டவரே நமக்கு இவர், ஆண்டவரே நமக்கு இதை வழங்குபவர், ஆண்டவரே நமக்கு இவர் அவரே நமக்கு இதை அளிப்பவர்.

விடை:........................................................................................................

8. வாளுக்கு இரையானோர் இப்படியாவர். அவர்களின் பிணங்கள் இவ்வாறாகும். அவர்களின் இது மலைகளில் வழிந்தோடும்.

விடை:........................................................................................................

9. காட்டு விலங்குகள் கழுதை இதனுடன் சேர்ந்து திரியும். இவைகள் ஒன்றை ஒன்று கத்தி அழைக்கும்.

விடை:........................................................................................................

10. இந்த வீட்டாருக்கும் இவர்களுக்கு உதவுவோருக்கும் எதிராகக் கிளர்ந்தெழுபவர்.

விடை:........................................................................................................

11. படைகளின் ஆண்டவர் இதற்குப் பாதுகாப்பாய் இருப்பார்.

விடை:........................................................................................................

12. இவரின் வாய் தயக்கமின்றித் தெளிவுடன் பேசும். மூடர் இனி இப்படி என அழைக்கப்பட்டார்.

விடை:........................................................................................................

13. கவலையற்ற பெண்களே! ஓராண்டும் சில நாள்களும் சென்றபின் நீங்கள் நடுநடுங்குவீர்கள் ஏனெனில் இது இனி வராது.

விடை:........................................................................................................

14. நீர் வளமிக்க இடங்களில் எல்லாம் பயிர்செய்து தாராளமாக மேயுமாறு இவற்றை அவிழ்த்து விடும் நீங்கள் நற்பேறு பெற்றவர்கள்.

விடை:........................................................................................................

15. சீயோனில் இப்படியாகவும் எருசலேமில் இவ்வாறு கொண்ட ஆண்டவர்.

விடை:........................................................................................................

பெயர் :........................................................................................

முகவரி :........................................................................................

தரம் :........................................................................................

பங்கு :........................................................................................

முடிவுத்திகதி 2024.12.14

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் 01



படம் 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :

முகவரி :

தரம் :

பங்கு :

முடிவுத்திகதி 2024.12.14

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் - 45

### நீதிமொழிகள் அதிகாரம் 13 - 15 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | | ம் | கு | க் | கா | து | பா | தி | நீ |
| வை | அ | ன் | பு | கொ | ள் | கி | றா | ர் | |
| க் | க | வா | க் | கு | ப் | பி | ற | ழா | த |
| கா | ம | கோ | நே | ர் | வ | ழி | | ம் | ம் |
| ப் | கி | ம | க | க் | ய் | து | ம் | வ | கு |
| ப | ழ் | க | | மை | லி | வ | கு | ல் | க் |
| வ | ச் | னு | கூ | ர் | ம | தி | றா | செ | ளி |
| ர் | சி | ம் | று | பே | ற் | ந | ற் | றை | ம |
| த | ழை | த் | தோ | ங் | கு | ம் | ஊ | நி | ர |
| | | வை | ப | ப் | ளி | ப | ப் | வ | உ |

1 ஆம் பரிசு 700/= ரூபா
R. டிலுக்ஸ்ராஜ்
இல. 48, நித்தியபுரி
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்





2 ஆம் பரிசு 500/= ரூபா
T. தெரேசா
இல. 37/3, வித்தியாலய வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
வேர்ஜினியா வெல்ட்
இல. 12, பாரதிபுரம்
திருகோணமலை
புனித சதாசகாய அன்னை ஆலயம்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
யோ. டிவாஸ்
இல. 676, அன்புவழிபுரம்
திருகோணமலை
புனித சதாசகாய அன்னை ஆலயம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
சிவகுமார் யுரேஷ்மா
இல. 242, லூர்து ஆலய வீதி, பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
டெமெற்றியா மனிவன்னன்
இல.43, வேளாங்கண்ணி வீதி
லூர்து அன்னை திருத்தலம்

## புனித யோவான் நற்செய்தி அதிகாரங்கள் 17 ~ 20

1 ஆம் பரிசு 700/= ரூபா
ஷிம்திகா
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
F.R. நிரோசா
இல. 51, சிவன் வீதி,
திருகோணமலை
குவாடலூப்பே அன்னை திருத்தலம்





3 ஆம் பரிசு 300/= ரூபா
ஒலென்ஷியா பிரின்ஸ்டன்
இல. 8, யூட்லேன், பூம்புகார் வீதி
லூர்து அன்னை திருத்தலம்

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி ~ 59
### எசாயா 20 ~ 24 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
N. நெவின்
இல. 250, சேர்ச்ரோட், பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
M. ஆன் ஸார்திகா
இல. 98/2, மத்திய வீதி
உவர் மலை
குழந்தை இயேசு ஆலயம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
அன்ஷிலா ஜெரின்
இல. 926, முருகன் கோவிலடி
பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான மீட்டற் கருத்தமர்வானது 31.08.2024 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. இக்கருத்தமர்வில் தமிழ் மற்றும் சிங்கள மறையாசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் தமிழ், சிங்கள மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான பரீட்சை 17.09.2024 அன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.



மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட் அடிகளாரின் வெள்ளி விழாக் கொண்டாட்டமானது மறைக்கல்வி நடுநிலைய பணியாளர்கள் மற்றும் மறையாசிரியர்களின் ஏற்பாட்டில் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் 28.09.2024 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.




## 2025 ஆம் ஆண்டு யூபிலி ஆண்டிற்கான இலச்சினை

2025ஆம் ஆண்டிற்கான இலட்சினையைத் தெரிவு செய்தார் திருத்தந்தை. இவ் இலட்சினையின் பொருளாக பூமியின் நான்கு திசைகளிலும் வாழும் அனைத்து மனித குலத்தையும் அடையாளப்படுத்தும் நான்கு மனித உருவங்கள் நான்கு நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்த நால்வரும் ஒருவர் மற்றவரை ஒற்றுமை மற்றும் உடன்பிறந்த உணர்வுடன் அரவணைத்து நங்கூரம் கொண்ட சிலுவையைப் பற்றிப் பிடித்து பின் தொடர்வது போல சித்தரிக்கப்பட்டுள்ளது.




நால்வரின் உருவமும் கடலில் செல்லும் படகின் அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளன. படகானது திருஅவையாகவும் நீல நிற அலைகள் உலகின் உறுதியற்ற வலுவற்ற நிலையையும் எடுத்துரைக்கின்றன. அலைகள் சூழ்ந்த கடலில் படகினைப் பாதுகாக்க சிலுவையானது நங்கூரமாக எதிர்நோக்கின் அடையாளமாகத் திகழ்கின்றது. அலைகள் சூழ்ந்த கடலில் சிலுவையை நம்பிக்கையுடன் பற்றிப் பிடித்து மனித குலமாகிய திருஅவை இயக்கத்தில் இருப்பது போல இந்த இலச்சினை அமைந்துள்ளது. திருப்பயணியின் பயணம் தனிநபர் ஒருவரின் முயற்சி அல்ல மாறாக ஒன்றிணைந்த செயல் திறன் என்பதை இப்படம் வர்ணிக்கின்றது.

## 45வது அப்போஸ்தலிக்க பயணத்தை தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தோனேசியா, பப்புவா நியூ கினியா, திமோர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி தனது அப்போஸ்தலிக்க பயணத்தைத் தொடங்கினார். மொத்தமாக 12 நாட்களைக் கொண்டதாக இத்திருப்பயணம் அமைந்தது.



## திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஊக்குவிப் பாளர்களுக்கான முதலாவது ஒருநாள் பயிற்சி செயலமர்வானது 16.09.2024 அன்று உப்புவெளி மேய்ப்புப்பணியக கேட்போர் கூடத்தில் இயக்குனர் அருட்பணி றொய்ஷன் ஸ்பாக்ஸ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மேன்மை தங்கிய மறைமாநில ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை கலந்து கொண்டு இந்நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்த ஊக்குவிப்பாளர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி வைத்தார்.




## துயர் பகிர்கிறோம்

### அமரர். திருமதி. மேரி அக்னஸ் திஸாநாயக்க



**திருகோணமலை மறைமாவட்ட கந்தளாய் பங்குத்தந்தை அருட்பணி. ஜோர்ஜ் திஸாநாயக்க அடிகளாரின் தாயார் ஆவார்.**